# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 18: பரலோகத்தின் பலகணிகள்

ஆதியாகமம் 27:1-28

### நடந்த கதை . . .

மிகவும் கைவிடப்பட்ட நிலையில் தனிமையாக யாக்கோபு இருந்தார்; கபடும் பேராசையும்தான் அதற்குக் காரணம். யாக்கோபும் ஏசாவும் இரட்டைக் குழந்தைகள்; தன் அண்ணன் ஏசாவிடம் கூழைக்கொடுத்து, சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபு பிடுங்கினார். பிறகு, தன் அம்மாவின் உதவியோடு அப்பாவை ஏமாற்றி, ஏசாவுக்குரிய ஆசீர்வாதத்தையும் அப்பாவிடம் வாங்கிவிட்டார்.

இப்போது ஏமாற்றப்பட்ட சகோதரன் கொலைசெய்வதாக மிரட்ட, வீட்டைவிட்டுத் தப்பித்து ஓடினார். தன் வஞ்சகத்திட்டங்கள் தனக்கே திரும்பியதை நினைத்து, தலைகுனிந்து அழுதார். வனாந்தரத்தில் தனியனாக, ஒரு கல்லில் தலைவைத்துப் படுத்து, ஓய்வெடுக்க நினைத்தார். ‘தேவன் என்னை மன்னிப்பாரா? என் பெற்றோரை மீண்டும் பார்க்கமுடியுமா?’ என்று அவருக்குக் குழப்பமாக இருந்தது. களைப்படைந்திருந்த யாக்கோபு தூங்கிப் போனார். பிரகாசமான வெளிச்சத்தோடு ஒரு கனவு கண்டார். திறந்திருந்த வானங்களிலிருந்து சுடரொளி வீசியது; பரலோகத்திலிருந்து பூமிக்கு ஓர் ஏணி வைக்கப்பட்டிருந்தது. எண்ணற்ற தூதர்கள் ஜொலித்த வண்ணமாக அந்த ஏணியில் இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தார்கள்.



பிறகு பரலோகத்திலிருந்த ஆண்டவர் பேசினார்; யாக்கோபுடைய பிரயாணத்தில் அவரை ஆசீர்வதிப்பதாக வாக்குக்கொடுத்தார். ஆபிரகாம், ஈசாக்கோடு செய்துகொண்ட உடன்படிக்கையை யாக்கோபோடும் உறுதிப்படுத்தினார்.

கண்விழித்த யாக்கோபு முழங்காலில் நின்றார்; தன் பேராசைக் குணங்களை விட்டுவிடுவதாக ஒரு பொருத்தனைபண்ணினார். ‘தேவரீர், எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்’ என்று பொருத்தனைபண்ணினார். ஆதி 28:22.

யாக்கோபு செய்த அந்தப் பொருத்தனையை தேவன் ஏற்றுக்கொண்டார்; தேவன் பரலோகத்தின் பலகணிகளைத் திறந்தார். அதனால் 20 வருடங்கள் கழித்து, யாக்கோபு தன் ஊருக்குத் திரும்ப வந்தபோது, மிகவும் செல்வந்தராகவும் தாராளகுணம் படைத்தவராகவும் மாறியிருந்தார்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

## 1. பத்தில் ஒரு பங்கைத் தேவனுக்குக் கொடுக்கவேண்டும் என்கிற உண்மையை யாக்கோபு எங்குக் கற்றுக்கொண்டார்?

**ஆதியாகமம் 14:18, 20.** *உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு … இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் ____________________ கொடுத்தான்.*

**குறிப்பு:** வருமானத்தின் பத்தில் ஒரு பங்குதான் தசமபாகம். தசமபாகம் என்றாலே 'பத்தில் ஒரு பங்கு' என்றுதான் அர்த்தம். தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசமபாகம் கொடுத்து, பல வருடங்களுக்கு முன்னரே ஒரு முன்மாதிரியை வைத்துப்போயிருக்கிறார்.

## 2. உங்கள் வருமானத்தில் எத்தனை பங்கு தேவனுக்குச் சொந்தமானது?

**லேவியராகமம் 27:30.** ____________________ *எல்லாம்* ____________________ *உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது.*

**குறிப்பு:** நம்மிடமுள்ள அனைத்தும் 100 சதவிகிதம் தேவனுக்கே சொந்தம்.

**சங்கீதம் 24:1.** பூமியும்அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.

நம் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை, அதாவது தசமபாகத்தைக் கொடுத்து, நம்மிடமுள்ள அனைத்தும் தேவனுக்கே சொந்தமென நாம் ஒத்துக்கொள்ளும்படி தேவன் சொல்லுகிறார்.

## 3. நம் தசமபாகத்தை எவ்வாறு பயன்படுத்த தேவன் திட்டம்வைத்துள்ளார்?

**எண்ணாகமம் 18:21,24.** *லேவியின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும்* ____________________ *அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய* ____________________ *லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்.*

**1கொரிந்தியர் 9:13,14.** *ஆசாரிய* ____________________*செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில்* ______________________________*, பலிபீடத்தை அடுத்துப் பணிவிடைசெய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை* ____________________ *சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்.*

**குறிப்பு:** பழைய ஏற்பாட்டில் தம் ஊழியக்காரர்களாகிய லேவியர்களை ஆதரிப்பதற்காக, தசமபாகம் கொடுக்கும்படி தேவன் சொன்னார். 1கொரிந்தியர் 9:13 இல், முற்கால ஆசாரியர்கள் தேவாலயத்திற்கு வந்த தசமபாகத்தில் பயனடைந்ததுபோல, இன்றைய சுவிசேஷ ஊழியர்கள் சபைக்குக் கொடுக்கப்படும் தசமபாகத்திலிருந்து சம்பளம்பெற வேண்டுமென தேவன் சொல்கிறார்.

## 4. தசமபாக முறைமை மோசேயின் பிரமாணத்தைச் சார்ந்ததா? அது சிலுவையோடு வழக்கற்றுவிட்டதா?

**ஆதியாகமம் 28:20,22.** *அப்பொழுது யாக்கோபு: … தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத்* ____________________ *செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்.*

**குறிப்பு:** இல்லை! மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே ஆபிரகாமும் யாக்கோபும் தசமபாகம் கொடுத்தார்கள். அது சீனாய்க்கு முந்தின காலக்கட்டம். எனவே சிலுவையோடு முடிந்து போன சடங்காச்சாரப் பிரமாணங்களோடு அதைச் சேர்க்கமுடியாது. ஊழியத்தை ஆதரிக்கவே தசமபாகச் சட்டத்தை தேவன் கொடுத்திருக்கிறார்; அது இன்றும் பொருந்தும்.

## 5. ஆனால் தசமபாகம்கொடுப்பது தவறென்று இயேசு கண்டிக்கவில்லையா?

**மத்தேயு 23:23.** *மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் ________________ செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதி யையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், ________________ செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும்.*

**குறிப்பு:** இல்லை. பரிசேயர்கள் தசமபாகம் கொடுக்கும்போது, மரக்காலில் அளந்துகொடுக்காமல், இலைகளையும், சிறுவிதைகளையும் எண்ணிப்பார்த்து, பிரித்துக்கொடுத்தார்கள். அதனால் தான் தசமபாகம் கொடுப்பதில் அவ்வளவு கவனம்காட்டின பரிசேயர்கள் நியாயத்திலும் இரக்கத் திலும் விசுவாசத்திலும் தவறுவதாக இயேசு குற்றஞ்சாட்டினார். தசமபாகத்திற்காக அல்ல, கிறிஸ்தவத்தின் உன்னத நியதிகளைப் புறக்கணித்ததற்காகவே இயேசு அவர்களைக் குற்றஞ் சாட்டினார். அதனால்தான் இயேசு, "இவைகளையும் (தசமபாகம்) செய்யவேண்டும். அவை களையும் விடாதிருக்கவேண்டும்" என்றார்.

## 6. தசமபாகம் கொடுப்பதுபற்றி தேவன் கொடுத்திருக்கும் அற்புத வாக்குத் தத்தங்கள் யாவை?

**மல்கியா 3:10.** *என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி, தசமபாகங்களை யெல்லாம் பண்டசாலையில் கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் ________________ பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ________________ வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என் னைச் ________________ பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

**குறிப்பு:** உங்களுக்குச் சந்தேகமிருந்தால், தசமபாகத்தைக் கொடுப்பதால், இடங்கொள்ளாமல் போகுமட்டும் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுகிறீர்களா இல்லையா என்று என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று தேவன் சொல்லுகிறார். தசமபாகம் கொடுக்கும் ஆயிரக்கணக்கானவர் களுக்கு உண்மை என்னவென்பது தெரியும். தேவனைவிடவும் நீங்கள் தாராளமாகக் கொடுத்துவிடவே முடியாது.

## 7. தசமபாகங்களைப் பண்டசாலைக்குக் கொண்டுவரும்படி தேவன் தம் மக்களிடம் கூறினார். அதன் அர்த்தம் என்ன?

**நெகேமியா 13:12.** *அப்பொழுது யூதர் எல்லாரும் தானியம் திராட்சரசம் எண்ணெய் என்பவைகளில் தசமபாகத்தைப் ____________________ கொண்டுவந்தார்கள்.*

**குறிப்பு:** பண்டசாலை என்பது தேவனுடைய சபையின் கருவூலம். (கருவூலம்தான் வேதாகமத்தில் பண்டசாலை என்று சொல்லப்படுகிறது. மல்கியா 3:10 இல், பண்டசாலையை 'என் ஆலயம்' என்று தேவன் குறிப்பிடுகிறார். 1நாளா 9:26; 2நாளா 31:11,12; நெகே 10:37,38 ஆகிய வசனங் களில் பண்டசாலையானது தேவனுடைய ஆலயத்தின் அறை என்றும், தேவாலயப் பண்டசாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பண்டசாலை என்றால், தேவனுடைய சபையின் கருவூலம் என்பது தெளிவாகிறது.

## 8. நாம் கொடுக்கும் தசமபாகம் உண்மையில் யாருக்குச் செல்கிறது?

**எபிரெயர் 7:8.** *அன்றியும், இங்கே, மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்கு கிறார்கள்; அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று "____________________ (இயேசு) வாங்கினான்.*

**கொலோசெயர் 3:23,24.** *நீங்கள் ... எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக் கென்று செய்யாமல், ____________________ மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.*

**குறிப்பு:** நாம் தசமபாகத்தை மனிதர்களுக்கு அல்ல, தேவனுக்குக் கொடுக்கிறோம். அது அவருக்குச் சொந்தமானது. தேவனுக்கென்று கொடுத்தபிறகு, அது பயன்படும்விதம்பற்றி நாம் கவலைப்படக்கூடாது. தம்முடைய பணத்தை நிர்வகிக்கவும், அதை யாராவது துஷ்பிரயோகம் செய்தால், அவரைக் கையாளவும் அவருக்குத் தெரியும்.

## 9. தேவனுக்குச் சொந்தமான என்னுடைய தசமபாகம்போக, வேறு என்னத்தை தேவன் தம் மக்களிடம் கேட்கிறார்?

**சங்கீதம் 96:8.** ____________________ கொண்டுவந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

**மல்கியா 3:8.** மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் ____________________தானே.

**குறிப்பு:** ஆண்டவர் மேலான அன்பால் உதாரத்துவமான காணிக்கையைக் கொடுக்கவேண்டும்; அவருடைய ஆசீர்வாதங்களுக்காக ஸ்தோத்திரக் காணிக்கை கொடுக்கவேண்டும்.

## 10. காணிக்கையாக நாம் எவ்வளவு கொடுக்கவேண்டும்?

**2 கொரிந்தியர் 9:7.** அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் ____________________ நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

**குறிப்பு:** எவ்வளவு காணிக்கை கொடுக்கவேண்டுமென்று வேதாகமம் அளவை நிர்ணயிக்கவில்லை. தேவனுடைய உணர்த்துதலுக்கேற்ற உதாரத்துவமாகக் கொடுப்பதற்கு அவரவர் தீர்மானிக்கவேண்டும்.

## 11. தேவனுடைய ராஜ்யத்தை நாம் சுதந்தரிக்கவேண்டுமானால், ஆதாம் ஏவாள் தோற்றுப்போன எந்தப் பரீட்சையில் நாம் வெல்லவேண்டும்?

**ஆதியாகமம் 3:3.** ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற ____________________ கனியைக் குறித்து, தேவன், 'நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் ____________________ ____________________' என்று சொன்னார்.

**குறிப்பு:** தோட்டத்திலிருந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைத் தவிர, மற்ற அனைத்து விருட்சங்களின் கனிகளையும் புசிக்கலாமென்று ஆதாம்–ஏவாளிடம் தேவன் சொல்லியிருந்தார். விலக்கப்பட்ட கனியைப் புசித்தாலோ, தொட்டாலோ அவர்களுக்கு மரணம் தான். அந்த மரத்தைச் சுற்றிலும் தேவன் மின்சார வேலி போடவில்லை. அவர்கள் தாராளமாகச் சென்று பறிக்கும் தூரத்தில்தான் அது இருந்தது. தேவனை நம்பாததால், அவர்கள் அதைப் பறித்துப் புசித்தார்கள். இன்றும், அதே பரீட்சையைத்தான் தேவன் நமக்கும் வைத்திருக்கிறார். "உங்களிடமுள்ள பணத்தில் பத்தில் ஒரு பங்கு எனக்குரியது; மற்ற அனைத்தையும் நீங்கள் வைத்துக்கொள்ளலாம். எனக்குரியதை எடுக்கவேண்டாம்" என்று அவர்சொல்கிறார். ஆனாலும், நாம் விரும்பினால் அதைச் செலவழிக்க நமக்கு உரிமையுள்ளது. அப்படிச் செய்தால், ஆதாம்–ஏவாள்போல் பாவம் செய்தவர்களாவோம். விலக்கப்பட்ட விருட்சத்தின் கனி தேவனுக்குத் தேவையில்லை. அது அவர்களுடைய மெய்ப்பற்றுக்கு வைக்கப்பட்ட ஒரு சோதனை. அது போல நம் தசமபாகமும் அவருக்குத் தேவையில்லை, எல்லாம் அவருடையதே! அது அவர் மேலான நம் அன்புக்கும் மெய்ப்பற்றுக்கும் நம்பிக்கைக்கும் வைக்கப்படும் ஒரு சோதனை.

## 12. நாம் தேவனுக்குத் தசமபாகமும் காணிக்கைகளும் செலுத்தாவிட்டால், எந்தக் கற்பனையை மீறுகிறோம்?

**மல்கியா 3:8.** மனுஷன் தேவனை ____________________? நீங்களோ என்னை ____________________. எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.

**யாத்திராகமம் 20:15.** ____________________ செய்யாதிருப்பாயாக.

**குறிப்பு:** தெரிந்தே தசமபாகத்திலும் காணிக்கையிலும் ஏமாற்றுபவர்கள் திருடர்கள் என்று தேவன் சொல்லுகிறார். மனிதர்களிடம் திருடுவதே மோசமானது. அதிலும் தேவனிடமிருந்து திருடுவது எவ்வளவு பெரிய மோசம்! இரட்சிப்பைக் காணாதவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க தேவன் நியமித்திருக்கும் பணத்தைக் களவாடுமளவிற்கு மட்டமாகச் செல்ல மக்களால் எவ்வாறு முடிகிறது என்பது தெரியவில்லை.

## 13. தெரிந்தே தசமபாகமும் காணிக்கையும் கொடுக்காமல் தேவனைக் கொள்ளையிடுகிறவர்களுக்கு என்ன நிகழுமென்று தேவன் சொல்கிறார்?

**மல்கியா 3:9.** *நீங்கள் ____________________பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.*

**1கொரிந்தியர் 6:10.** ____________________, *பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.*

**குறிப்பு:** உண்மையாகத் தசமபாகமும் காணிக்கையும் கொடுக்காதவர்கள் சபிக்கப்பட்டவர்கள்; அவர்கள் மாறாவிட்டால், திருடர்களென்று தேவனுடைய ராஜ்யத்திலிருந்து விலக்கப்படுவார்கள்.

## 14. இச்சை ஏன் மிகமோசமான ஒரு பாவமாக இருக்கிறது?

**லூக்கா 12:34.** *உங்கள் ________________________ எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.*

**குறிப்பு:** பேராசை மோசமான ஒரு குணம்; ஏனென்றால் நம் மூலதனங்களைப்பற்றியே நம் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கும். பணம்சேர்ப்பதிலேயே குறியாக இருந்தால், பேராசையும் அகந்தையும் இருதயத்தில் குடிபுகுந்துவிடும். ஆனால் தேவ பணி வளர்ச்சியடைவதில் நம் சிந்தை இருந்தால் நம் இருதயத்தில் அன்பும், அக்கறையும், தயாளமும், தாழ்மையும் வரும். நம் பொக்கிஷம் எங்கேயோ அங்குதான் நம் இருதயம் இருக்கும். யூதாஸின் பண ஆசையே 30 வெள்ளிக்காசுக்காக அவன் இயேசுவைக் காட்டிக்கொடுக்கச் செய்தது. மத்தேயு 26:14–16.

## 15. நாம் இயேசுவின் தசமபாகத்தையும் காணிக்கைகளையும் அவருக்குக் கொடாமல் கொள்ளையிட்டால், அவருக்கு எப்படி இருக்கும்?

**எபிரெயர் 3:10.** *ஆதலால், நான் அந்தச் சந்ததியை ________________________, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்று ....*

**குறிப்பு:** பெற்றோரிடம் பிள்ளை பணத்தைத் திருடினால் பெற்றோருக்கு எப்படி இருக்கும்? அப்படித்தான் இயேசுவுக்கு இருக்கும். பணத்தைத் தொலைத்துவிட்டால் அதிகம் கண்டுகொள்ளமாட்டோம். ஆனால் நேர்மையும் அன்பும் உண்மையும் இல்லாமல் போவது மிகவும் வேதனைக்குரியது. நம் இரட்சகரின் இருதயத்தை நோகடிக்க யாராவது விரும்புவீர்களா?

## 16. தேவனுக்கென்று கொடுப்பதில் வேறு என்ன நியதிகளை வேதாகமத்தில் தேவன் சொல்லியுள்ளார்?

**2கொரிந்தியர் 8:5.** *முன்பு தங்களைத்தாமே ________________________, பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.*

**நீதிமொழிகள் 3:9.** *உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் ________________________ கர்த்தரைக் கனம்பண்ணு.*

**நீதிமொழிகள் 11:24,25.** *வாரியிறைத்தும் ______________________________ உண்டு, அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. ________________________ ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்.*

**அப்போஸ்தலர் 20:35.** *வாங்குகிறதைப்பார்க்கிலும் ______________________________ ____________________.*

**லூக்கா 12:21.** *தேவனிடத்தில் ______________________________, __________________ பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்.*

**லூக்கா 6:38.** *கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்;அமுக்கிக் குலுக்கிச் _______________ _______________ நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்.*

**1கொரிந்தியர் 16:2** *அவனவன் ... தன்தன் ______________________ எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கக்கடவன்.*

**உபாகமம் 16:17.** *உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ____________________ ____________, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன்.*

**குறிப்பு:** தேவ ஆசீர்வாதம் இல்லாமல் என் வருமானத்தில் பத்துப் பங்கையும் வைத்திருப்பதைவிட, தேவ ஆசீர் வாதத்தோடு பத்தில் ஒன்பது பங்கை வைத்திருப்பதுதான் மிகமிக நல்லது. பரலோகத்தின் பலகணிகளை தேவன் திறக்கும்போது, நமக்குக் கிடைப்பது பொருளாதார ஆசீர்வாதம் மாத்திரமல்ல; ஆரோக்கியம், மன அமைதி, ஜெபங்களுக்குப் பதில், பாதுகாப்பு, அன்புள்ள குடும்பம், உடல் பெலம், ஞானமான தீர்மானங்களை எடுக்கும் திறம், இயேசுவோடு நெருங்கிய உறவு, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல், பழைய கார் இன்னும் பழுதில்லாமல் ஓடுதல் போன்றவையும் அதில் அடங்கும். நாம் உண்மையிலேயே இயேசுவை நேசித்தால், அவருடைய ஊழியத்திற்காகத் தற்தியாகத்துடன் கொடுப்பது பாரமாக இருக்காது. மாறாக, மிகுந்த சந்தோஷத்தோடும் மனநிறைவோடும் நாம் கொடுக்கும்படி ஒரு மகிமையான சிலாக்கியமாக, ஆசீர்வாதமாக அது இருக்கும்.

### 17. யாக்கோபு தன் கனவில் கண்ட ஏணி எதைச் சுட்டிக்காட்டுகிறது?

**யோவான் 1:51.** *வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் ______________________ ____________ ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள்.*

**குறிப்பு:** பரலோகத்தையும் பூமியையும் தொடுமளவிற்கு ஓர் ஏணி வைக்கப்பட்டிருந்ததை யாக்கோபு கண்டார். அந்த ஏணி இயேசுவைச் சுட்டிக்காட்டியது. தசமபாகங்களையெல்லாம் அவருடைய பண்டசாலைக்குக் கொண்டுசென்றால், இடங்கொள்ளாமற் போகுமட்டும் நம்மை ஆசீர்வதிப்பதாக மல்கியா 3:10 சொல்கிறது. அந்த ஆசீர்வதாம் இயேசுதான்.

### 18. இயேசுவுக்கு நாம் கொடுக்கும் மிகப்பெரிய பரிசு எது?

**நீதிமொழிகள் 23:26.** *என் மகனே உன் ________________ எனக்குத் தா, உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக.*

**மாற்கு 7:6.** *இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் ________________ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.*

**குறிப்பு:** இயேசுவுக்கு நம் இருதயங்களை அர்ப்பணித்திருந்தால், நம்மிடமுள்ள அனைத்தும் நிச்சயம் அவருக்குத்தான் சொந்தம்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

தசமபாகத்திலும் காணிக்கையிலும் நாம் உண்மையாக இருந்தால், நம் வாழ்வின் அனைத்துப் பிரயாசங்களிலும் தேவன் நம் பங்காளியாக இருப்பார். தசமபாகமும் காணிக்கையும் கொடுத்து, தேவன் உங்களுடைய பங்காளியாக இருக்கும்படி இன்றே அவரை அழைப்பீர்களா?

**பதில்:** ________________________________

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com